

திருவள்ளூர் மேற்கு மாவட்டம், திருத்தணி வடக்கு ஒன்றியம், தாழவேடு ஊராட்சியில் த.வெ.க.வைச் சேர்ந்த பி.சத்யா மற்றும் அ.தி.மு.க.வைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன், சிகாமணி ஆகியோர் அக் கட்சிகளில் இருந்து விலகி திருத்தணி வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.எல். விஜயகுமார் ஏற்பாட்டில் திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். சந்திரன் முன்னிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர். இந்நிகழ்வில் கிளைக் கழகச் செயலாளர் காமராஜ் மற்றும் கழகத் தோழர்கள், ஒன்றியக் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### இன்னொரு சிறுமியும் கடத்தலா?

# த.வெ.க. ஆட்சியில் குழந்தைகள் கடத்தல் அதிகரிப்பு!

## கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

**சென்னை, நவ.12**

**த.வெ.க. ஆட்சியில் கொலை, கொள்ளை சம்பவங்களோடு குழந்தைகள் கடத்தலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி கண்டித்துள்ளார்.**

இது தொடர்பாக கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



செஞ்சியில் சிறுமி காணாமல் போய் இன்றுடன் 30 நாட்கள் கடந்து விட்டன. இன்னும் அந்தச் சிறுமி மீட்கப்படவில்லை. அதற்குள், செஞ்சி அருகே ஜெயங்கொண்டான் பகுதியில் இன்னொரு சிறுமியைக் கடத்த முயன்றதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

ஆறு மாதங்களாகியும் சிறிதும் பொறுப்பில்லாத இந்த த.வெ.க. ஆட்சியில் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் அடுத்தடுத்து நடக்கும் நிலையில், இப்போது குழந்தை கடத்தலும் அதிகரித்துள்ளது.

காணாமல் போன சிறுமியை இன்னும் மீட்க முடியாமல், இந்த த.வெ.க. அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது?

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

## காளையார்கோவில் தமிழரசனின் தாயார் மறைவு!

*சிவகங்கை, நவ. 12- காளையார்கோவில் வடக்கு ஒன்றிய துரும்புப் பட்டி தி.மு.க. கிளைக் கழக மேனாள் செயலாளர் சுப்பிரமணிய அம்பலகாரரின் மனைவியும், ஒன்றிய அவைத்தலைவர் தமிழரசனின் தாயாருமான மரகதம் அம்மாள் வயதுமூப்பின்காரணமாக கடந்த 7.11.2026 ஆம் தேதி இயற்கை எய்தினார். என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*அன்னாரது மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்குமலர்மலைவைத்து அஞ்சலி செலுத்தினர்.*

*அன்னாரது இறுதிச் சடங்குகள் நடைபெற்று, அவரது சொந்த ஊரான துரும்புபட்டியில்உள்ளஇடுகாட்டில்உடல்நல்லடக்கம் செய்யப்பட்டது.*

### பத்திரப்பதிவுத் துறையைத் தனியார் மயமாக்க எதிர்ப்பு!

# திருவள்ளூரில் ஆவண எழுத்தர்கள் போர்க்கொடி!

*திருவள்ளூர், நவ.12-*

*தமிழகத்தில் த.வெ.க ஆட்சி பொறுப்பேற்றுள்ள நிலையில், பத்திரப்பதிவுத் துறையில் தனியார் பங்களிப்புடன் புதிய திட்டத்தைச் செயல்படுத்தும் முயற்சிக்கு எதிராக ஆவண எழுத்தர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். ஏற்கனவே பல்வேறு தொழில்துறைகளில் மாற்றங்களை எதிர்பார்த்து வரும் மக்களிடையே, பத்திரப்பதிவுத் துறையிலும் தனியார் மயமாக்கல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக எழுந்துள்ள எதிர்ப்பு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*

*ஆவண எழுத்தர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் இ-டெண்டர் மூலம் பத்திரப்பதிவுப் பணிகளைத் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளும் திட்டத்தைக் கைவிட வலியுறுத்தி, தமிழ்நாடு பத்திர எழுத்தாளர் நலச்சங்கம்*



*சார்பில் திருவள்ளூர் இணை மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்கள் முன்பாக கருப்புப் பட்டை அணிந்து பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடைபெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட ஆவண எழுத்தர்கள், தட்டச்சுத் தொழிலாளர்கள், பத்திர விற்பனை யாளர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் முனைவோர் பங்கேற்று கோஷங்களை எழுப்பினர்.*

*அரசாணை எண் 164-ன் அடிப்படையிலான டிஜிட்டல் ஹப் மற்றும் தனியார் பங்களிப்புத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்; தற்போதைய ஆவண எழுத்தாளர் நடைமுறையைப் பாதுகாக்க வேண்டும்; ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் முடிவுகளை அரசு தன்னிச்சையாக எடுக்கக் கூடாது; சேவைக் கட்டணத்தை உயர்த்துவதுடன் முத்திரைத்தாள் விற்பனை சார்ந்த தொழில் வாய்ப்புகளையும் பாதுகாக்க வேண்டும் எனப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.*

*மேலும், ஆன்லைன் பத்திரப்பதிவு முறையில் தொழில்நுட்பக் கோளாறுகள் மற்றும் ஆவணக் குளறுபடிகள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி போலி ஆவணங்கள் உள்ளிட்ட முறைகேடுகள் நடைபெறக்கூடும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அச்சம் தெரிவித்தனர். சொத்துப் பரிவர்த்தனையில் சிறிய தவறு ஏற்பட்டாலும் பொதுமக்களின் வாழ்நாள் சேமிப்பே கேள்விக்குறியாகும் நிலையில், போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாமல் புதிய திட்டத்தைச் செயல்படுத்துவது பொதுமக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் எச்சரித்தனர்.*

*த.வெ.க அரசு இந்தக் கோரிக்கைகளுக்குச் செவி சாய்த்து, ஆவண எழுத்தர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்குமா அல்லது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.*

*இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தால் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள இணை மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்களில் பத்திரப்பதிவுப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு, பத்திரப்பதிவுக்காக வந்த பொதுமக்களும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டது.*

### இலவச சைக்கிள் வாங்கும் டெண்டரில் ஊழல் - முறைகேடு!

# 6 மாதத்திலேயே மெகா ஊழல் ஆட்சியாக மாறிய த.வெ.க. ஆட்சி!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

*சென்னை, நவ.12-*

*பள்ளி மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வாங்கும் டெண்டரிலும் ஊழல் செய்து 6 மாதத்திலேயே மெகா ஊழல் ஆட்சியாக த.வெ.க. ஆட்சி மாறியுள்ளதாக 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.*

*இது குறித்து 10.11.2026 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குறியுள்ளதாவது:-*

*தூய ஆட்சி என கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த தவெக, 6 மாதத்திலேயே ஊழல் ஆட்சியாகவும், வெறுப்பு ஆட்சியாகும் ஆகிவிட்டதாக வாக்களித்த மக்கள் புலம்பி வருகின்றனர். த.வெ.க. ஆட்சிக்கு வந்து 6 மாதத்தில் மின்சாரத்துறை, இந்து சமய அறநிலையத் துறை உள்ளிட்ட பல்வேறு அரசு துறைகளில் சுமார் ரூ.1,01,715 கோடி அளவுக்கு மெகா ஊழல் முறைகேடுகள் நடந்துள்ளதாக தி.மு.க. தெரிவித்துள்ளது.*

*அரசு கஜானாவில் மக்கள் வரிப்பணம் மிக மோசமாக விரயம் செய்யப்பட்டுள்ளதாகவும், ஒப்பந்தங்கள் மற்றும் கொள்முதல்களில் வெளிப்படைத்தன்மை துளியும் இல்லை என்றும் குற்றம்சாட்டியுள்ளது. மேலும் பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நில விவகாரத்தில் ரூ.100 கோடி முறைகேடு நடந்து விசாரணை நடந்து வருகிறது.*



தினகரன்

நவம்பர் 10, 2026 செவ்வாய்க்கிழமை

**சைக்கிள் வாங்குவதில் ஊழல்**

தூய ஆட்சி என கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த தவெக, 6 மாதத்திலேயே ஊழல் ஆட்சியாகவும், வெறுப்பு ஆட்சியாகும் ஆகிவிட்டதாக வாக்களித்த மக்கள் புலம்பி வருகின்றனர். தவெக ஆட்சிக்கு வந்து 6 மாதத்தில் மின்சாரத் துறை, இந்து சமய அறநிலையத்துறை உள்ளிட்ட பல்வேறு அரசு துறைகளில் சுமார் ரூ.1,01,715 கோடி அளவுக்கு மெகா ஊழல் முறைகேடுகள் நடந்துள்ளதாக திமுக தெரிவித்துள்ளது. அரசு கஜானாவில் மக்கள் வரிப்பணம் மிக மோசமாக வீரயம் செய்யப்பட்டுள்ளதாகவும், ஒப்பந்தங்கள் மற்றும் கொள்முதல்களில் வெளிப்படைத்தன்மை துளியும் இல்லை என்றும் குற்றம்சாட்டியுள்ளது. மேலும் பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நில விவகாரத்தில் ரூ.100 கோடி முறைகேடு நடந்து விசாரணை நடந்து வருகிறது.

அந்த வரிசையில் தமிழ்நாட்டில் பள்ளி மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வாங்கும் டெண்டரில் ஊழல் நடந்ததாக எதிர்க்கட்சிகள் மற்றும் மக்கள் வரிப்பணம் மிக மோசமாக விரயம் செய்யப்பட்டுள்ளதாகவும், ஒப்பந்தங்கள் மற்றும் கொள்முதல்களில் வெளிப்படைத் தன்மை துளியும் இல்லை என்றும் குற்றம்சாட்டியுள்ளனர். புதுச்சேரி மாநிலத்தில் ஒரு மாணவருக்கான சைக்கிள் ரூ.3,610 விலையில் வாங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஒரு சைக்கிள் சுமார் ரூ.7,235 விலைக்கு (புதுச்சேரியை விட கிட்டத்தட்ட 2 மடங்கு கூடுதல் விலைக்கு) கொள்முதல் செய்யப்படுவதாக தக வல்கள் வெளியாகியுள்ளன.

5 லட்சத்துக்கும் அதிகமான சைக்கிள்களை மொத்தமாக வாங்கும் போது விலை குறைவாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் அளவுக்கு அதிகமாக விலை நிர்ணயம் செய்யப்பட்டு மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படுவதாக திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் 5.32 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா சைக்கிள் வழங்குவதற்கான டெண்டரை முன்னணி நிறுவனம் அண்மையில் கைப்பற்றியது.

மாணவர்களுக்கான சைக்கிள் ஒன்றுக்கு ரூ.7,235 மற்றும் மாணவிகளுக்கான சைக்கிள் ஒன்றுக்கு ரூ.7,476 என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 8,800 சைக்கிள்கள் வாங்கும் புதுச்சேரி அரசுக்கு ரூ.3,610 விலையில் கிடைக்கும் போது, அதைவிட 60 மடங்கு அதிகமாக அதாவது 5 லட்சத்துக்கும் மேற்பட்ட சைக்கிள்களை வாங்கும் தவெக அரசுக்கு அதைவிட குறைந்த விலையில்தான் கிடைத்திருக்க வேண்டும். பொதுவாக மொத்தமாக கொள்முதல் செய்யும் போது தயாரிப்பு செலவு குறைய வேண்டும் என்பதுதான் சாதாரண மக்களின் கேள்வியாக உள்ளது.

தவெக அரசின் மின்சார கொள்முதல் டெண்டர் விவகாரத்தை தொடர்ந்து, தற்போது சைக்கிள் டெண்டரிலும் ஊழல் நடந்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் குற்றம் சாட்டுகின்றனர். புதுச்சேரி சைக்கிள் டெண்டர் குறித்த தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என மின்சாரத்துறை அமைச்சர் நிர்மல்குமார் மறுப்பு தெரிவித்துள்ளார். புதுச்சேரியின் சைக்கிள் டெண்டர் ஆவணம் உண்மையில்லை என்றால், தமிழக அரசு பெற்றுள்ள டெண்டர் ஆவணங்களின் அசல் நகலை பொதுவெளியில் வெளியிட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

சைக்கிள்களுடன் சேர்த்து ஹெல்மெட் மற்றும் தண்ணீர் பாட்டில் வழங்கப்படுவதாக காரணங்கள் கூறப்பட்டாலும், இவ்வளவு பெரிய விலை வித்தியாசம் ஏற்படுவது ஏன் என்ற கேள்விக்கு தவெக அரசு உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவின் மைத்துனரும், லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவருமான ஜோஸ் சார்லஸ் உள்பட பல்வேறு தரப்பினரும் கேள்வி எழுப்பி உள்ளனர். மெகா ஊழல் நடைபெறுவதற்கு முன் டெண்டரை முதல்வர் விஜய் தடுத்து நிறுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

# செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

## (10.11.2026)



1. வேலூர் மாவட்டம் குடியாத்தம் அடுத்த சேங்குன்றத்தில் முன்விரோதம் காரணமாக பா.ம.க. பிரமுகர் துப்பாக்கியால் சுட்டு படுகொலை ...

2. மதுரை மாவட்டம் பேரையூர் அருகே தும்பை நாயக்கன்பட்டியில் இருசக்கர வாகனத்தில் வந்த டாஸ்மாக் கடை உதவியாளரை வழிமறித்து சராமாரியாக தாக்கி கொலை செய்த வாலிபர்கள் ...

3. கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டாறு அருகே வீட்டுப் பாதை தொடர்பான தகராறில் துப்புரவு பணியாளர் தலையில் கல்லை போட்டு படுகொலை .....

4. திருச்சி மாவட்டம் சமயபுரம் அருகே பட்டாசு வெடிப்பதில் ஏற்பட்ட தகராறில் தி.மு.க. கிளைச் செயலாளர் மகன் ஸ்குரு டிரைவரால் குத்தி கொலை ....



5. காஞ்சிபுரம் மாவட்டம் திருகாலிமேடு அருகே முன் விரோதம் காரணமாக கறிக்கடை தொழிலாளி வெட்டி கொலை....

6. சென்னை, வியாசர் பாடி சத்தியமூர்த்தி நகர் அருகே முன் விரோதம் காரணமாக ஆட்டோ டிரைவர் வெட்டி கொலை.....

7. விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருகே முன்விரோதம் காரணமாக கட்டிட தொழிலாளி அடித்துக் கொலை ....

8. பெரம்பலூர் அருகே நொச்சியம் கிராமத்தில் பட்டாசு வெடிப்பதை கண்டித்த கூலி தொழிலாளி இரும்பு கம்பியால் தாக்கி படுகொலை ...

9. கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் அருகே நின்னையூர் கிராமத்தில் முன்விரோதம் காரணமாக ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் அடித்துக் கொலை...

10. திண்டுக்கல் மாவட்டம் எரியோடு அருகே கள்ளக்காதல் விவகாரம் காரணமாக வாலிபர் வெட்டி படுகொலை ...



11. செங்கல்பட்டு மாவட்டம் சோழிங்கநல்லூர் அருகே கூலித் தொழிலாளி இரும்பு கம்பியால் அடித்து கொலை...

12. திருச்சி பொன்மலை பகுதியில் உள்ள முட்புதரில் 70 வயது மதிக்கத்தக்க மூதாட்டி, ரத்தக் காயங்களுடன் சடலமாக மீட்பு,கொலையா..? என போலீசார் விசாரணை...

13. விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே தாமனூரில் ஆறாம் வகுப்பு படிக்கும் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த தலைமை ஆசிரியர் சிக்கினார் ...

14. கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் அருகே மேல்பட்டாம்பக்கத்தில் இரு தரப்பினர் இடையே ஏற்பட்ட தகராறை விசாரிக்க சென்ற இன்ஸ்பெக்டர் மற்றும் மூன்று போலீசார் மீது சரமாரி தாக்குதல் ....

15. சென்னையை அடுத்த அயப்பாக்கத்தில் காலி மது பாட்டில்களை திரும்ப வாங்காததால் குடிமகன்கள் தகராறு, டாஸ்மாக் கடை விற்பனையாளர் மீது தாக்குதல் ...

16. சென்னை ஆலந்தூர் அருகே நசரத்புரத்தில் பொது வழியில் மது அருந்துவதை கண்டித்த ரோந்து போலீசாரை சரமாரியாக தாக்கிய போதை ஆசாமிகள்...

17. சென்னை வியாசர்பாடியில் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த வாலிபரை அரிவாளால் சரமாரியாக வெட்டி தப்பிய பைக் வாலிபர்கள்...



18. சென்னை நுங்கம்பாக்கம் புஷ்பா நகரில் வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் பெட்ரோல் குண்டு வீசிய பைக் வாலிபர்கள், கார் மோட்டார் சைக்கிள்கள் எரிந்து நாசம் ...

19. சென்னை தங்கசாலை வள்ளலார் நகர் முதல்வர் நகர்ப்புற மேம்பாட்டு வாரிய குடியிருப்பில் கஞ்சா புழக்கம் அதிகரித்து உள்ளதாகவும் விபச்சாரம் நடப்பதாகவும், ரவுடிகள் அதிக அளவில் மிரட்டலில் ஈடுபடுவதாக கூறி பொதுமக்கள் சாலை மறியல் ஈடுபட்டதால் பரபரப்பு.

20. விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே கொடூரம்: 2 வயது பெண் குழந்தைக்கு பாலியல் தொல்லை, 14 வயது சிறுவன் ; தட்டிக் கேட்ட தந்தை மீது தாக்குதல்..!

21.செங்கம் அருகே கஞ்சா போதையில் இருந்த இளைஞர்கள் குடிநீர் மின் மோட்டார் மற்றும் மின்சாதனங்களை உடைத்து சேதப்படுத்தியதால் அதிர்ச்சி.

22.திருவாரூர் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள புறக்காவல் நிலையம் பூட்டியிருப்பதால், போதை ஆசாமிகளின் அத்துமீறல்கள் அதிகரிப்பு.

23.சேலம் மாவட்டம் ஆத்தூரில் உள்ள உணவகத்தில் கஞ்சா போதையில் இளைஞர் ரகளை சமையல் மாஸ்டரை கத்தியால் குத்தியதால் அதிர்ச்சி.

24. திருச்சி மாவட்டம் துறையூர் தொகுதியில் குடிநீர் பிரச்சனை குறித்து மனு அளிக்க சென்றவரையும், பத்திரிகை நிருபரையும் துணை சபாநாயகர் ரவிசங்கர் கண்மூடித்தனமாக தாக்கியதால் அதிர்ச்சி.



25.கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகே அடரி கிராமத்தில் 12ஆம் வகுப்பு மாணவனுக்கு கத்திக் குத்து.

26.சென்னை தாம்பரம் அடுத்த பெருங்களத்தூரில் இளைஞரை தாக்கி, 55 கிலோ வெள்ளியை கொள்ளையடித்த மர்ம நபர்கள்.



27. திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லியை அடுத்த குத்தம்பாக்கத்தில் தண்டபாணி என்பவரது வீட்டில் 30 சவரன் நகை கொள்ளை.

28.தூத்துக்குடியில் இருசக்கர வாகன பந்தயத்தில் ஈடுபட்டதை தட்டிக்கேட்ட பொதுமக்களை அரிவாளை காட்டி மிரட்டிய இளைஞர்கள்.

29.மதுரை கீரைத்துறையில் தீபாவளி பட்டாசு வெடித்தபோது மதுபோதையில் ஏற்பட்ட தகராறில் 3 பேருக்கு அரிவாள் வெட்டு.

30.தீபஒளி திருநாளையொட்டி, சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே உள்ள வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு அன்பளிப்பு வழங்கி ரீல்ஸ் எடுத்த த.வெ.க. நிர்வாகி.

31. திருவள்ளூர் அருகே தீபாவளிக்கு சாலையில் பட்டாசு வெடிக்கும் தகராறில் இளைஞரை அரிவாளால் வெட்டி காயம் ஏற்படுத்தியுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.